தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2018 – 2020)

(பதினைந்தாவது பேரவை)

பதின்மூன்றாவது அறிக்கை

(பேரவைக்கு அளிக்கப் பெற்ற நாள் : 24 MAR 2020)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை – 600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2018 – 2020)

(பதினைந்தாவது பேரவை)

பதின்மூன்றாவது அறிக்கை

"மருத்துவமனைகளும் மற்றும் மருந்தகங்களும்" குறித்து மதிப்பீட்டுக் குழு (2003–2004) (பன்னிரெண்டாவது பேரவை) பேரவைக்கு அளித்த இருபத்தாறாவது அறிக்கையிலுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேலும் எடுத்த நடவடிக்கைகள் மீதான வரைவு அறிக்கை.

பொருளடக்கம்

		பக்கங்கள்
2018–2020 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் அமைப்பு	...	iii
I. முன்னுரை	...	v
II. அறிக்கை	...	vii
III. இணைப்புகள்		
இணைப்பு – 1 நிறைவேற்றப் பெற்றதாகக் கருதப்பெற்றவை	...	1–7
இணைப்பு – 2 துறையின் பதில்கள் குழுவால் ஏற்றுக்கொள்ளப் பெற்றவை	...	8–11

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு (2018–2020)

(பதினைந்தாவது பேரவை)

(5.7.2018–ஆம் நாள் அமைக்கப்பெற்று 31.03.2020 வரை நீட்டிக்கப்பட்டது)

தலைவர்

1. திரு. தோப்பு என்.டி. வெங்கடாச்சலம்

உறுப்பினர்கள்

2. மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்,
துணை முதலமைச்சர் (அலுவல் காரணமாக)
3. திரு. துரைமுருகன்,
தலைவர், பொதுக் கணக்குக் குழு (அலுவல் காரணமாக)
4. திரு. S. செம்மலை,
தலைவர், பொது நிறுவனங்கள் குழு (அலுவல் காரணமாக)
5. திரு. C.V. இராஜேந்திரன்
6. திரு. இ. கருணாநிதி
7. திரு. ஆர். காந்தி
8. திரு. V.S. காளிமுத்து
9. திருமதி ப. சத்யா
10. திரு. சி. சந்திரசேகரன்
11. திரு. எஸ்.எஸ். சரவணன்
12. திரு. M. செல்வராசு
13. திரு. அ. நடராஜன்
14. திரு. பெ. பெரியபுள்ளான் (எ) செல்வம்
15. முனைவர் க. பொன்முடி
16. திரு. கி. மாணிக்கம்
17. திரு. M.K. மோகன்
18. திரு. வி.ஜி. ராஜேந்திரன்
19. திரு. வாகை சந்திரசேகர்

செயலகம்

திரு. கி. சீனிவாசன் . . செயலாளர்

திரு. அ. அய்யன்பெருமாள் . . இணைச் செயலாளர்

திரு. க.லோ. சிவகுமரன் . . துணைச் செயலாளர்

I. முன்னுரை

1. "மருத்துவமனைகளும் மற்றும் மருந்தகங்களும்" குறித்து மதிப்பீட்டுக் குழு (2003–2004) (பன்னிரெண்டாவது பேரவை) பேரவைக்கு அளித்த இருபத்தாறாவது அறிக்கையிலுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேலும் எடுத்த நடவடிக்கைகள் மீதான பதின்மூன்றாவது அறிக்கையை குழு (2018–2020) (பதினைந்தாவது பேரவை) அதிகாரம் அளித்தவாறு மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகிய நான் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

2. "மருத்துவமனைகளும் மற்றும் மருந்தகங்களும்" குறித்து மதிப்பீட்டுக் குழு (1996–1997) (பதினொன்றாவது பேரவை) தனது எட்டாவது அறிக்கையை 30.4.1997 ஆம் நாளன்று பேரவைக்கு அளித்தது. மதிப்பீட்டுக் குழு (1996–1997) (பதினொன்றாவது பேரவை) பேரவைக்கு அளித்த எட்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்து மதிப்பீட்டுக் குழு (2003–2004) (பன்னிரெண்டாவது பேரவை) தனது இருபத்தாறாவது அறிக்கையை 12.2.2004 ஆம் நாளன்று பேரவைக்கு அளித்தது.

3. குழு 19.3.2020–ஆம் நாளன்று சென்னையில் கூடி மேலே பத்தி 1–இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகள் மீது மேலும் அரசு எடுத்த நடவடிக்கைப் பட்டியலை ஆய்வு செய்து இவ்வறிக்கைக்கு ஒப்புதல் அளித்தது.

4. குழுவின் பணிகளுக்கு பெரிதும் உதவிய சட்டமன்றப் பேரவைச் செயலாளர் அவர்களுக்கு குழு தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

சென்னை – 600 009,
நாள்: 19.3.2020
விகாரி, பங்குனி–6,
திருவள்ளுவர் ஆண்டு–2051.

தோப்பு என்.டி. வெங்கடாச்சலம்,
தலைவர்,
மதிப்பீட்டுக் குழு.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

II. அறிக்கை

"மருத்துவமனைகளும் மற்றும் மருந்தகங்களும்" குறித்து மதிப்பீட்டுக் குழு (2003–2004) (பன்னிரெண்டாவது பேரவை) பேரவைக்கு அளித்த இருபத்தாறாவது அறிக்கையிலுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேலும் எடுத்த நடவடிக்கைகள் மீதான அறிக்கை.

*****

1. 1996–1997 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (பதினோராவது பேரவை) தனது எட்டாவது அறிக்கையினை பேரவைக்கு 30.4.1997–ஆம் நாளன்று பேரவைக்கு அளித்தது. இவ்வறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகளை ஆய்வு செய்த மதிப்பீட்டுக் குழு (2003–2004) (பன்னிரெண்டாவது பேரவை) தனது இருபத்தாறாவது அறிக்கையை 12.2.2004 ஆம் நாளன்று பேரவைக்கு அளித்தது.

2. மதிப்பீட்டுக் குழு (2003–2004) (பன்னிரெண்டாவது பேரவை) பேரவைக்கு அளித்த இருபத்தாறாவது அறிக்கையில் கண்டுள்ள 8 பரிந்துரைகளில் 6 பரிந்துரைகள் அரசால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பெறுகின்றன. அவை இணைப்பு 1–இல் பட்டியலிடப்பெற்றுள்ளன.

3. 2 பரிந்துரைகள் குறித்து அரசு அளித்துள்ள பதில்கள் குழுவால் ஏற்றுக்கொள்ளப் பெற்றிருக்கின்றன. இவை பற்றிய விவரங்கள் இணைப்பு 2–இல் பட்டியலிடப்பெற்றுள்ளன.

சென்னை – 600 009,
நாள்: 19.3.2020
விகாரி, பங்குனி–6,
திருவள்ளுவர் ஆண்டு–2051.

தோப்பு என்.டி. வெங்கடாச்சலம்,
தலைவர்,
மதிப்பீட்டுக் குழு.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

III. இணைப்புகள்

இணைப்பு – 1

நிறைவேற்றப் பெற்றதாக கருதப்பெற்ற பரிந்துரைகள்

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
1	13	47	தற்போது 104 வட்ட தலைமை மருத்துவமனைகளில் அமைக்கப்பட்டுள்ள முதன்மை பலதுறை மருந்து சிகிச்சைப்பிரிவு இதர 32 வட்ட தலைமையிட மருத்துவமனைகளிலும் விரைவில் அமைத்து இதன் நோக்கத்தை நிறைவேறச் செய்ய துறை நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்
(5)

தற்போது 30 படுக்கைகளின் எண்ணிக்கைக்கு குறைவாக உள்ள 23 தாலுக்கா மற்றும் 49 தாலுக்கா அல்லாத மருத்துவமனைகளை 30 படுக்கை வசதிகளுடன் ஆய்வுக்கூடம், அறுவை அரங்கம் அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் முதலிய வசதிகளுடன் மேம்படுத்துவதற்காக மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரிடமிருந்து செயற்குறிப்பு பெறப்பட்டு, ரூ.37.50 கோடி நிதியுதவி நபார்டு வங்கியிடம் கோரப்பட்டுள்ளது. நிதியுதவி பெற தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.29109/எஸ்2/2002–17, நாள் 18.06.2003)

குழுவின் குறிப்புரை
(6)

ஏற்கெனவே குழு பரிந்துரைத்தவாறு எஞ்சிய 32 வட்ட தலைமை மருத்துவமனைகளில் முதன்மை பலதுறை மருத்துவ சிகிச்சை பிரிவு ஏற்படுத்தப் பட்டுள்ளதா என்பதை தெரிவிக்கும்படி குழு மீண்டும் பரிந்துரை செய்கிறது.

மேலும் துறையின் பதில்
(7)

அரசாணை எண்.147 சுகாதாரம் நாள்.27.5.2014–இன்படி விருதுநகர் மாவட்டம், திருத்தங்கல் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் சுமார் 4.26 கோடி செலவில் வட்ட மருத்துவமனையாகவும், அரசாணை எண்.148 சுகாதாரம் நாள்.27.5.2014–இன்படி சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் சுமார் 4.12 கோடி செலவில் வட்ட மருத்துவமனையாகவும், அரசாணை எண்.142 சுகாதாரம் நாள்.27.5.2014–இன்படி திருச்சி மாவட்டம், துவாக்குடி அரசு ஆரம்ப சுகாதார நிலையம் சுமார் 2.25 கோடி செலவில் வட்ட மருத்துவமனையாகவும் பல்வேறு சிறப்பு பிரிவுகளுடன் தரம் உயர்த்தப்பட்டு தற்போது செயல்பாட்டில் உள்ளது. அரசாணை எண்.127, நாள்.19.5.2014–ன்படி 16 அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு இணையாக தரம் உயர்த்தப்பட்டு

குழுவின் குறிப்புரை
(8)

நிறைவேற்றப்பட்டதாகக் கருதலாம்.

பல்வேறு சிறப்புசிகிச்சை பிரிவுகளான விஷமுறிவு சிகிச்சை பிரிவு, இரத்த சுத்திகரிப்பு பிரிவு, ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தை பராமரிப்பு (CEmONC) மையங்கள், பச்சிளம் குழந்தை பராமரிப்பு மையங்கள் (NBSU) நோயுற்ற பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு மையங்கள் (SNCU) யோகா (ம) இயற்கை வழி மருத்துவ மையம், மனநல சிகிச்சை பிரிவு பல பிரிவுகளுடன் உபகரணங்கள், துணிவகைகள், தளவாடங்கள் ரூ.78.89 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும் அரசாணை எண்.441 நாள்.29.12.2014–இன் படி 26 அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கு பல்வேறு சிறப்பு சிகிச்சை பிரிவுகளான தொற்றாநோய், தீக்காய சிகிச்சை, மகப்பேறு பிரிவு, கண்சிகிச்சை, அறுவை அரங்கம், தீவிர சிகிச்சை பிரிவு, இரத்த வங்கி, முதியோர் சிகிச்சை பிரிவு, விபத்து (ம) அவசர சிகிச்சை பிரிவு, தலைக்காய சிகிச்சை பிரிவு போன்ற பல வசதிகள் ரூ.64.46 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டு தற்போது பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது. அரசாணை எண்.233 சுகாதாரம் நாள்.23.9.2016–இன் படி 13 வட்டம் சாரா மருத்துவமனைகள் மற்றும் 26 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் வட்ட மருத்துவமனைகளாக பல்வேறு சிறப்பு சிகிச்சை பிரிவுகள் உபகரணங்கள், தளவாடங்கள், துணிவகைகள் மற்றும் பணியாளர்கள் என ரூ.61.17 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் 13 மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் எம்.ஆர்.ஐ.ஸ்கேன் வசதியும், 29 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் மற்றும் 21 வட்ட மருத்துவமனைகளில் சிடி.ஸ்கேன் வசதி ஏற்படுத்தப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. எனவே குழு பரிந்துரைத்தவாறு எஞ்சிய 32 வட்ட தலைமை மருத்துவமனைகளில் முதன்மை பலதுறை மருத்துவ சிகிச்சை பிரிவு ஏற்படுத்தப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(எஸ்2) துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.37162/எஸ்2/2019–4, நாள் 06.09.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
2	18	60	காலியாக உள்ள பணி இடங்களை விதி 10 (ஏ) (1)–இன் படி தற்காலிகமாக நிரப்ப வேண்டுமென்றும் தமிழ்நாடு தேர்வாணையத்தின் மூலம் இப்பணியிடங்கள் விரைவில் நிரப்பப்பட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பெற வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்

(5)

100 வட்ட மருத்துவமனைகளில் 77 வட்ட மருத்துவமனைகளில் பல் மருத்துவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். மீதமுள்ள காலியிடங்களை அரசு தேர்வாணையக் குழு மூலம் தேர்வு செய்ய மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநரிடமிருந்து பணியிட மதிப்பீடு பெற்று நிரப்ப தனியே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.29109/எஸ்2/2002–17, நாள் 18.06.2003)

குழுவின் குறிப்புரை

(6)

வட்ட மருத்துவமனைகளில் பல் மருத்துவர்களை நியமிக்க தமிழ்நாடு அரசு தேர்வாணையத்திற்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டுள்ளதா என்பதை தெரிவிக்கும்படி துறையிடம் கோர குழு மீண்டும் பரிந்துரை செய்கிறது.

மேலும் துறையின் பதில்

(7)

தமிழ்நாடு மருத்துவப்பணிகள் தேர்வாணையம் 2012–இல் துவங்கப்பட்ட பிறகு அத்தேர்வாணையம் மூலம் வட்ட மருத்துவமனைகளில் காலியாக இருந்த உதவி பல் மருத்துவர் பணியிடங்களுக்கு தேர்வு நடத்தப்பட்டு அத்தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களை கொண்டு உதவி பல் மருத்துவர் பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டுவிட்டன.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.37162/எஸ்2/2019–4, நாள் 06.09.2019)

குழுவின் குறிப்புரை

(8)

நிறைவேற்றப்பட்டதாகக் கருதலாம்.

பரிந்துரையின் சுருக்கம்

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்
(1)	(2)	(3)
3	20	71

(4)

சூலூர் ஆரம்ப சுகாதார நிலையம் மருத்துவ அலுவலர் மற்றும் பொதுமக்கள் ஒத்துழைப்புடன் நன்கு செயல்படுவதால், ஒரு வட்ட மருத்துவமனைக்கு எந்த அடிப்படையில் கருவிகள் உபகரணங்கள் மற்றும் இதர வசதிகள் செய்யப்படுகின்றனவோ அதுபோன்று இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் வழங்கப்பெற வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்

(5)

சூலூர் ஆரம்ப சுகாதார நிலையம் வட்டம் சாரா மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு 6 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. இந்த வட்டம் சாரா (Non-Taluk) மருத்துவமனைக்கு மொத்தம் ரூ.65.33 இலட்சத்தில் 24 படுக்கை வசதி கொண்ட வார்டு, எக்ஸ்ரே வசதி (X-ray Block) ஆய்வுக்கூட வசதி மற்றும் அல்ட்ரா சோனாகிராம் வசதி ஏற்படுத்த நபார்டு வங்கியிடம் நிதி உதவி கோரப்பட்டுள்ளது. நிதி உதவி கிடைக்கப்பெற்றதும் உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.29109/எஸ்2/2002–17, நாள் 18.06.2003)

குழுவின் குறிப்புரை

(6)

சூலூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவ கருவிகள் உபகரணங்கள் மற்றும் இதர வசதிகள் ஏற்படுத்த நபார்டு வங்கியிடம் நிதியுதவி பெறுவதில் தற்போதைய நிலையினை தெரிவிக்குமாறு குழு மீண்டும் பரிந்துரை செய்கிறது.

மேலும் துறையின் பதில் (7)	குழுவின் குறிப்புரை (8)
அரசாணை எண்.233, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை நாள்.23.9.2016–இன்படி சூலூர் வட்டம் சாரா மருத்துவமனையை வட்டம் மருத்துவமனையாக தரம் உயர்த்தி அரசாணை வழங்கப்பட்டது. இதன்படி ரூ.36.00 இலட்சம் கட்டிடம் பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. கட்டிடப்பணிகள் நிறைவு பெற்று 4.3.2019 அன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது. மேலும் உபகரணங்கள் மற்றும் துணிவகைகளுக்காக ரூ. 8.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இம்மருத்துவமனைகளுக்கு கூடுதலாக 6 மருத்துவம் சார்ந்த பணியாளர்களும் 13 மருத்துவம் சாரா பணியாளர்களும் ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணியில் உள்ளனர். (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.37162/எஸ்2/2019–4, நாள் 06.09.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதலாம்.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
4	37	120	சேலம் மாவட்டம், ஓமலூர் அரசு மருத்துவமனையில் நில ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு அப்பகுதி வட்டாட்சியருக்கு கடிதம் எழுதி உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் தேவைப்படின் ஊராட்சித் தலைவர் மற்றும் ஊர் பெரியவர்களின் உதவியையும் நாடலாம் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
ஓமலூர் அரசு மருத்துவமனையில் நில ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்காக ஓமலூர் வட்டாட்சியர் மற்றும் சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் சேலம் நலப்பணிகள் இணை இயக்குநரால் தொடர்பு கொள்ளப்பட்டு ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.29109/எஸ்2/2002–17, நாள் 18.06.2003)	சேலம் மாவட்டம் ஓமலூர் அரசு மருத்துவமனையில் நில ஆக்கிரமிப்பை அகற்றுவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த தற்போதைய நிலையை தெரிவிக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

மேலும் துறையின் பதில் (7)	குழுவின் குறிப்புரை (8)
ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு அருகில் உள்ள நத்தம் புறம்போக்கு நிலத்திலிருந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு நிலமாற்றம் செய்யப்பட்டு அரசாணை எண்.252 சுகாதாரம் (எச்) துறை நாள்.27.7.2004–ன்படி இம் மருத்துவமனைக்கு தலைக்காய சிகிச்சை பிரிவு மற்றும் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு ஏற்படுத்த ரூ.1.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டிடப்பணிகள் முடிக்கப்பட்டு 5.4.2008 முதல் பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.37162/எஸ்2/2019–4, நாள் 06.09.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதலாம்.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
5	44	129	சேலம் மாவட்டம், எடப்பாடி மருத்துவமனைப் பகுதியில் மின்சாரத் தடை மற்றும் மின் அழுத்தக்குறைவு பிரச்சினைகள் இல்லாததால் இம்மருத்துவமனை அறுவை சிகிச்சை அரங்கிற்கு குளிர்சாதன வசதி செய்வதற்கும் துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது. தற்போது காலியாகவுள்ள "லேப் டெக்னீசியன்" பணியிடம் "டார்க் ரூம் அஸிஸ்டெண்ட்" பணியிடம் ஆகியவற்றை நிரப்பவும் விரைவு நடவடிக்கை மேற்கொள்ளப்பெற வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
சேலம் மாவட்டம் எடப்பாடி மருத்துவமனையில் அறுவை சிகிச்சை மேற்கொள்ள ஏதுவாக அரசாணை (நிலை) எண்.56 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை நாள்.18.3.2003–இன்படி சேலம் மாவட்டம், எடப்பாடி மருத்துவமனை உட்பட 64 அரசு வட்ட மருத்துவமனைகளுக்கு குளிர்சாதன வசதி தலா 2 அலகுகள் வழங்கப் பட்டுள்ளது. எனவே இப்பணியினை விரைவில் முடித்திட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆய்வக நுட்புநர் நிலை 2 பணியிடம் 8.4.2003 முதல் காலியாக உள்ளது. ஜூலை மாதம் மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்ககத்தில் நடைபெறும் கலந்தாய்வில் இப்பணியிடத்தை நிரப்பிட உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இருட்டறை உதவியாளர் பணியிடம் 1.6.1998 முதல் வெற்றிடமாக உள்ளதால், இதன் உயிர்ப்பு காலாவதியாகியுள்ளது. இப்பணியிடத்திற்கு பணித்தொடாரணை மற்றும் மீள் செல்லுபடியாக்கல் ஆணை பெற்ற பின்னரே நிரப்பப்பட வேண்டும் இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.29109/எஸ்2/2002–17, நாள் 18.06.2003)	சேலம் மாவட்டம் எடப்பாடி மருத்துவ மனையில் "லேப் டெக்னீசியன்" பணியிடம் "டார்க் ரூம் அஸிஸ்டெண்ட்" பணியிடங்கள் நிரப்ப எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து தற்போதைய நிலையை தெரிவிக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.
மேலும் துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(7)	(8)
சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட 2 ஆய்வக நுட்புநர் (லேப் டெக்னீசியன்) பணியிடங்களில் முறையே 2 ஆய்வக நுட்புநர்கள் பணியமர்த்தப்பட்டு 03.03.2011 மற்றும் 04.03.2011 முதல் பணிபுரிந்து வருகிறார்கள். மேலும் தற்போது காலியாக இருந்த இருட்டறை உதவியாளர் (டார்க் ரூம் அஸிஸ்டெண்ட்) பணியிடமும் தற்போது நிரப்பப்பட்டு பணியாளர் 16.08.2019 முற்பகலிலிருந்து பணிபுரிந்து வருகிறார். (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.37162/எஸ்2/2019–4, நாள் 06.09.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதலாம்.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
6	46	136	காவலர் குடியிருப்புமனையை ஓமலூர் அரசு மருத்துவமனை விரிவாக்கத்திற்கு பயன்படுத்துவதற்கான வாய்ப்பு குறித்து உள்துறையுடன் மக்கள் நல்வாழ்வு மற்றும் சுகாதாரத் துறை கலந்துபேசி விரைவில் முடிவெடுக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்
(5)

ஓமலூர் அரசு மருத்துவமனை விரிவாக்கத்திற்கு காவலர் குடியிருப்புமனையை பயன்படுத்துவதற்கான வாய்ப்பு குறித்து மேற்கண்ட நிலத்தின் விஸ்தீரணம் மற்றும் மருத்துவமனைக்கும் காவலர் குடியிருப்பு நிலத்திற்கும் இடைப்பட்ட தூரம் முதலியவற்றை கண்டறிந்து மாவட்ட காவல் துறை அலுவலர், வருவாய் அலுவலர் மற்றும் பொதுப் பணித்துறை அலுவலருடன் கலந்து ஆலோசிக்கவும் மேற்கண்ட இடத்தினை மருத்துவத்துறைக்கு நிலமாற்றம் செய்வதற்கான ஒப்புதலை மாவட்ட காவல் துறை அலுவலரிடம் பெற்று மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம் உரிய கருத்துருவை அனுப்பிவைக்க சேலம் மாவட்ட நலப்பணிகள் இணை இயக்குநருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த இடத்தினை மருத்துவத் துறைக்கு மாற்றம் செய்வதற்கு உள்துறை மற்றும் காவல் துறை தலைமை இயக்குநருடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.29109/எஸ்2/2002–17, நாள் 18.06.2003)

குழுவின் குறிப்புரை
(6)

ஓமலூர் அரசு மருத்துவமனை விரிவாக்கத்திற்கு காவலர் குடியிருப்பு மனையை பயன்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து தற்போதைய நிலையினை தெரிவிக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

மேலும் துறையின் பதில்
(7)

மேற்குறிப்பிட்ட காவல் துறைக்கு சொந்தமான 3430.5 ச.மீ. நிலம் வட்டாட்சியர் மூலம் ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு ஒப்படைக்கப்பட்டு 10.08.2007–ஆம் நாளிட்ட அரசாணை எண்.286–இன்படி ரூ.1.59 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 48 படுக்கைகள் கொண்ட பொதுப்பிரிவு கட்டிடம் கட்டப்பட்டு அதில் சீமாங் பிரிவு மற்றும் ஏனைய பிரிவுகள் 9.2.2010 முதல் செயல்பட்டு வருகிறது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.37162/எஸ்2/2019–4, நாள் 06.09.2019)

குழுவின் குறிப்புரை
(8)

நிறைவேற்றப்பட்டதாகக் கருதலாம்.

இணைப்பு – 2

துறையின் பதில்கள் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பெற்றவை

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
1	28	92	உதகமண்டலம் தலைமையிட மருத்துவமனை மற்றும் நீலகிரி மாவட்டத்திலுள்ள இதர வட்ட மற்றும் வட்டமில்லா மருத்துவமனைகளுக்கு மருத்துவ அலுவலர்களை நியமனம் செய்யும்போது கூடியவரையிலும் அந்த வட்டாரத்தைச் சார்ந்த அப்பகுதிகளில் பணி செய்ய ஆர்வம் உள்ள மருத்துவர்களை பணியமர்த்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பெற வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது. மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ள உதகமண்டலம் தலைமையிட மருத்துவமனைப் பணியாளர் குடியிருப்பினை பழுது பார்ப்பதற்கு துறை விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும், குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறையிலிருந்து விடுவிக்கப்படும் மருத்துவர்களை மருத்துவத்துறையில் பணியமர்த்த கலந்தாய்வு நடைபெறவுள்ளது. அப்போது உதகமண்டலம் தலைமை மருத்துவமனை மற்றும் நீலகிரி மாவட்டத்திலுள்ள இதர வட்ட மற்றும் வட்டமில்லா மருத்துவமனைகளில் பணியுரிய விருப்பம் தெரிவிக்கும் மருத்துவர்கள் கண்டறியப்பட்டு அவர்கள் பணிநியமனம் செய்யப்படுவார்கள். 2003–2004 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்படும் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து உதகமண்டல தலைமையிட மருத்துவர் குடியிருப்பைப் பழுதுபார்ப்பதற்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும். (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.29109/எஸ்2/2002–17, நாள் 18.06.2003)	உதகமண்டலம் தலைமையிட மருத்துவமனை பணியாளர் குடியிருப்பினை பழுது பார்க்க ஆணைகள் ஏதும் வெளியிடப்பட்டுள்ளதா என்பதை தெரிவிக்கும்படி குழு மீண்டும் பரிந்துரை செய்கிறது.

			மேலும் துறையின் பதில் (7)	குழுவின் குறிப்புரை (8)
			நீலகிரி மாவட்டம் உதகமண்டலம் அரசு மருத்துவமனை வளாகத்தில் 58 குடியிருப்புகளில் 12 குடியிருப்புகள் செவிலியர் விடுதியாகவும், 20 குடியிருப்புகள் மருத்துவமனை பணியாளர்களுக்காகவும், 1 முதன்மை உறைவிட மருத்துவர் அலுவலர் அவர்களுக்கும் எஞ்சிய 25 குடியிருப்புகள் இதர பணியாளர்களுக்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டு அனைத்து குடியிப்புகளிலும் பணியாளர்கள் வசித்து வருவதுடன், இந்த குடியிருப்புகள் அனைத்தும் பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளதால், பொதுப்பணித்துறையின் பராமரிப்பு நிதி மூலம் குடியிருப்புகள் அவ்வப்போது பழுதுபார்க்கப்பட்டு தற்போது நல்லமுறையில் உள்ளது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.37162/எஸ்2/2019–4, நாள் 06.09.2019)	மலைப்பகுதி என்பதால் குடியிருப்புகளின் பழுது பார்க்கும் பணியினை துறை உடனுக்குடன் பொதுப்பணித் துறையின் ஒருங்கிணைப்புடன் சரிசெய்ய வேண்டுமென குழு வலியுறுத்துவதோடு துறையின் பதிலை ஏற்றுக்கொள்ளலாம்.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
2	30	103	ஈரோடு பகுதியில் காவேரியாற்றில் துணிகளை மொத்தமாக சலவை செய்வதற்கு பொதுமக்கள் பெரும் எதிர்ப்பு தெரிவித்து வருவதால் விரைவாக வழக்கை முடித்து ஈரோடு தலைமையிட மருத்துவமனையிலுள்ள நீராவி சலவை நிலையத்தை இயக்க நடவடிக்கை எடுக்கப்பெற வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது. மேலும் ஆணை வழங்கப்பட்ட மேற்சொன்ன 10 மருத்துவமனைகளிலும் விரைவில் நீராவி சலவை நிலையத்தை இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது. மேலும் சுகாதாரத்தை மனதில் கொண்டு மாநிலத்திலுள்ள இதர அரசு மருத்துவமனைகளிலும் இந்த ஏற்பாட்டை ஒரு கால கட்டத்திற்குள் செய்து கொடுப்பது உகந்ததாக இருக்கும் என்று குழு கருதுகிறது.

	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
	கட்டிட பணிகள் முடிவடைந்து நீராவி உலர் சலவையகம் இயங்கி வருகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.29109/எஸ்2/2002–17, நாள் 18.06.2003)	ஈரோடு தலைமையிட மருத்துவமனை தவிர ஆணைகள் வழங்கப்பட்ட ஏனைய 10 மருத்துவ மனைகளிலும் நீராவி சலவை நிலையம் இயங்குகிறதா என்பதையும், மாநிலத்திலுள்ள எஞ்சிய அரசு மருத்துவமனைகளிலும் இவ்வசதியினை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும் தெரிவிக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

மேலும் துறையின் பதில்
(7)

குழுவின் குறிப்புரை
(8)

1991–1992 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ், அரசாணை எண்.1492 சுகாதாரம், நாள் 22.11.1991–இன்படி 16 மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கு நீராவி சலவையகம் அமைத்திட ரூ. 800 இலட்சம் செலவில் ஒப்பளிக்கப்பட்டு பணிகள் பொதுப்பணித் துறை வசம் ஒப்படைக்கப்பட்டது. இந்நிலையில் மேற்கண்ட பணியில் தவறுகள் நடந்ததற்கான முகாந்திரம் இருந்ததால் இந்த கோப்பு ஊழல் கண்காணிப்பு துறையிடம் ஒப்படைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட பொதுப் பணித்துறை அலுவலர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்பொழுது, மேற்படி 16 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் விருதுநகர் மற்றும் ஈரோடு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு நீராவி சலவையகம் செயல்பட்டு வருகிறது. மேலும், காலம் கடந்த நிலையில் நீராவி சலவையகத்தை செயல்பாட்டிற்கு கொண்டு வர கூடுதல் தொடர் மற்றும் தொடரா செலவினங்களுக்கு அதிக அளவு நிதி தேவைப்பட்டதனை கருத்தில் கொண்டு பெரியகுளம், தென்காசி, திருப்பூர், கும்பகோணம், நாகப்பட்டினம், காஞ்சிபுரம், கடலூர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளுக்கு 2010–இல் தமிழ்நாடு சுகாதார திட்டத்தின் மூலம் அதிக திறன் கொண்ட சலவை இயந்திரங்கள் வழங்கப்பட்டது. இதில், திருப்பூர், கும்பகோணம், காஞ்சிபுரம், கடலூர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய இடங்களில் கட்டப்பட்ட நீராவி சலவையகத்திற்கான கட்டிடத்தில் மேற்படி சலவை இயந்திரங்கள் நிறுவப்பட்டு கட்டிடம் சலவை பணிகளுக்கான முழுமையான பயன்பாட்டில் உள்ளது. நாகப்பட்டினத்தில் மேற்படி கட்டிடத்தில் மருத்துவமனைக்கான மின்னாக்கி நிறுவப்பட்டு இக்கட்டிடம் பயன்பாட்டில் உள்ளது. இம்மருத்துவமனையில் வேறு இடங்களில் அதிக திறன் கொண்ட சலவை இயந்திரங்கள் நிறுவப்பட்டு சலவை பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. தென்காசி மற்றும் பெரியகுளம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் கட்டிடப்பணிகள் முழுமையாக முடிக்கப்படவில்லை. இம்மருத்துவமனைகளில் வேறு இடங்களில் அதிக திறன் கொண்ட சலவை இயந்திரங்கள் நிறுவப்பட்டு சலவை பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், நாகர்கோவில், ஆசாரிப்பள்ளம், சிவகங்கை, தர்மபுரி, தூத்துக்குடி மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு மருத்துவக் கல்வி இயக்குநரகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. தற்போது ஈரோடு, நீலகிரி மற்றும் விருதுநகர் மாவட்ட அரசு நீராவி சலவையகம் செயல்பட்டு வருகிறது. பிற

துறையின் பதில் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் மற்றும் பிற மருத்துவமனைகளில் தேவைக்கேற்ப அதிக திறன் கொண்ட சலவை இயந்திரங்கள் நிறுவப்பட்டு சலவை பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் படிப்படியாக CSSD (Central Sterile Supply Department) நிறுவப்பட்டு வருகிறது. இப்பகுதியில் மருத்துவமனையின் துணிகள் சுத்தம் செய்யப்பட்டு நோயாளிகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.38989/எஸ்2/2019–2, நாள் 30.10.2019)

கி. சீனிவாசன்,
செயலாளர்.